**<u>In the Court of the District Munsif, Eraniel</u>**

**Original Suit No. 44/2016** **Date:11.03.2026.**

**(PW1)- வீல்பிரட் சாம்ஜோசப்**

<u>**2** முதல் **4** ஆம் பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>

1. நான் இந்த வழக்கை எந்த பரிகாரத்திற்காக தாக்கல் செய்துள்ளேன் என்றால் நஷ்டஈடு வேண்டி தாக்கல் செய்துள்ளேன். ஏதற்காக நஷ்டஈடு என்றால் எனது சொத்தில் 500 சதுர மீட்டர் அளவு நான்குவழிசாலைக்காக எடுத்துவிட்டனர் அதற்காக வேண்டி தாக்கல் செய்துள்ளேன். வழக்கு சர்வே எண் என்ன என்றால் வில்லுக்குறி கிராமம் சர்வே எண் 678/12 ல் 7.5 ஏர் நிலமாகும். தாவா சொத்து எனக்கு எவ்வாறு கிடைத்தது என்றால் எனது அப்பாவின் அப்பா சொத்தாகும். எனது தாத்தா பெயர் என்ன என்றால் மரியஇன்னாசிநாடார். எனது அப்பாவின் பெயர் தனிசுலாஸ் என்றால் சரிதான்.

2. தாவா சொத்து எனக்கு கிடைத்த பின்பு நான் வரி செலுத்தியுள்ளேனா என்றால் செலுத்தியுள்ளேன். அதற்கான ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். எனது பெயரில் உள்ள பட்டா, அ பதிவோடு முதலியன தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை. தாவா சொத்தை கையகப்படுத்துவது எனக்கு எவ்வாறு தெரிந்தது என்றால் தினசரி நாளிதழில் பார்த்தேன். மேற்படி அறிவிப்பில் யாருக்கும் ஆட்சேபனை இருந்தால் விசாரணைக்கு ஆஜர் ஆகும்படி குறிப்பிட்டு இருந்தார் என்றால் சரிதான். நான் விசாரணைக்கு ஆஜர் ஆனேனா என்றால் ஆனேன்.

(ஒப்பம்)

**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**

**இரணியல்.**